DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.

**CC.NO. 3/2023**

Deposition of LW8 Examined as o PW8

Date: 28.10.2025

| | |
|---|---|
| Name | செல்வகுமார் |
| Father's/Husband's Name | ராமதாஸ் |
| Village | மயிலாடுதுறை |
| Taluk | |
| Age | 48/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 28.10.2025

(A1, A3 present. A2 absent. Petiton u/s. 355 BNSS filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவெண்காடு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன், நான் கடந்த 11.06.2021 மயிலாடுதுறை காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த கொற்றவை நல்லூர், வடக்கு தெரு செல்வம் மகன் ஆன்ந்த் என்பவரிடம்இருந்து புகார் வாக்குமூலத்தினை பெற்றேன். அந்த புகார் வாக்கமூலத்தின் அடிப்படையில் மயிலாடுதுறை காவல்நிலைய குற்ற எண் 1368/2021 ச/பி. 341, 294(b). 324, 323, 506(ii) இதசவின் கீழ் வழக்கினை பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ .4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு கோப்புகனை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

மருத்துவமனையில் இருந்து எங்களுக்கு தகவல் மாலை 06.15 மணிக்கு கிடைத்தது. நான் மருத்துவமனைக்க மாலை 06.30 மணிக்கு சென்று விட்டேன். நான் அங்கு செல்லும் போது மருத்துவர் சிகிச்சை அளித்து முடித்து விட்டார். புகார்தாரர் பேசும் நிலையில் இருந்தாரா என்றால் பேசும் நிலையில் தான் இருந்தார். அவருடன் உறவினர்கள் யாரேனும் இருந்தார்களா என்றால் அவருடைய சித்தப்பா பையன் தியானேஷ்வரன் இருந்தார். காயம்பட்டவர் சொன்ன வாக்குமூலத்தை தான் நான் எழுதிக்கொண்டேன். புகார் வாக்குமூலம் கொடுத்தவரின் அண்ணன் அந்த ஊரின் ஊராட்சி மன்ற தலைவர் என்பதாலும் அதற்கு முன்பு அந்த ஊரில் ஒரு பெண்ணை வேறு இனத்தை சேர்ந்தவர்க்கு திருமணம் செய்து வைப்பதாக கூறி பணம் பெற்றுக்கொண்டு அவ்வாறு செய்யாமல் இருந்ததை மேற்படி எதிரிகள் கேட்டதாலும், மேற்படி காயம்பட்டதாக சொல்லப்படும் நபர் மற்றும் அவருடைய அண்ணன் ஊரில் 2வது எதிரி சாராயம் விற்றதாக பொய்யாக சொல்லி வந்ததாலும் அதனை எதிரிகள் கேட்டதன் முன்விரோதத்தினால் மேற்படி எதிரிகள் மீது அந்த பகையை வைத்துக்கொண்டு பொய்யான புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கினை சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.